1469

கோமதி பிரசுரம் நெ. 2.

உ

முருகன் துணை.

சென்னை இராயபுரம்

ஸ்ரீ மௌனகுருசாமியவர்கள்

# மகத்துவமஞ்சரி.

---

இது

நாடகாசிரியர் & நாவலிஸ்ட்

சென்னை

ச. சு. சங்கரலிங்க நாடார் எழுதியது.

OFFICE OF THE REGI...
17 MAR 25
MADRAS

ம-ா-ா-ஸ்ரீ,

தி. மா. ஐயாவு நாடாரவர்களால்

அச்சியற்றியது.

ராம்பால் பிரஸ், சென்னை.

---

ரிஜிஸ்டர் காபிரைட்.

1925. [Price As. 2.

Q2:4196
N25
120068.

கோமதி பிரசுரம் நெ. 2.

உ

முருகன் துணை

சென்னை ராயபுரம் குணங்குடி மஸ்தான் சமாதிக்கெதிர் எழுந்தருளி யிருக்கும்

ஸ்ரீமௌனகுருசாமியவர்கள்

# மகத்துவமஞ்சரி.

இது

உடுமலை ஸ்ரீமான் சரபகவிமாணவர், தமிழ்நாடக சங்கீத சாஹித்ய வுபாத்தியாயர்

ச. சு. சங்கரலிங்க நாடார் எழுதியது.

சென்னை பட்டன் பாக்டரி

தி. மா. ஐயாவு நாடாரவர்களால்

அச்சியற்றியது,

ராம்பால் பிரஸ், சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1925. [அணா 2.

OFFICE OF THE ... 17 MAR 1925 MADRA...



சென்னை :

ஸ்ரீ மௌனாநந்தசுவாமிகள்.

## மகத்துவவிளக்கம்.

---

"அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கிவிட்டுவிட்டால்-இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்பதுபோல் பக்தர்களைப்போற்றிப் பூஜிப்பதும் அவர்க்குப் பணிவிடை செய்வதும் மானிடர் கடமையாம். இதுபற்றியே,

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மானவுன்னைத்
தேடுவது நின்னடியார் செய்கை பராபரமே"

என்ற பெரியார் வாக்கும் பிரசித்தமாயுலவுகிறது. ஆதலின் நமது மானிட யாக்கையின் மரண ஜனன மாய்கை விலகவும், மகத்தான மனோனந்த வாழ்விற் சேரவும் வேண்டிய வழிகாட்டியாய் நிற்கும், துறவிகளைத் துதிப்பதே மேன்மையாம்.

மனத்துறவு ஜனத்துறவு என்பதை நீக்கி அன்னாகார நித்திரையின்றி, பிறந்த ரூபமாக மவுனயோகத்தமர்ந்து, மானிடரின் மனதைக் கவரும் மகானுபாவரே துறவிகளிற் சிறந்தவரென்னலாம். துறவிக்கு வேந்தன் துரும்பு என்னும் பெரியோர் வார்த்தையைச் சீர்தூக்கிப் பார்ப்போமாயின், துறவிகள் பெருமை நன்கு விளங்கும்.

"ஆலயமே காயம் அன்பே சிவலிங்கம்
மாலயனுங் காணாத வள்ளலுக்கு—சீலமுறும்
அன்பே யபிஷேகம் அன்பேநல் லர்ச்சனையும்
அன்பே நைவேத்தியமு மாம்"

என்பதுபோல் அன்பென்னும் தோணியைக் கொண்டு, மனமென்னுஞ் சமுத்திரத்தைக் கடந்து, பாசபந்தங்களாகிய சகல போகத்தையும் வெறுத்து, அறிவென்னும் பரவெளியில்நின்று, ஆனந்த மென்னும் அன்னமருந்தி, அவனென்னும் சர்வேஸ்வரத் தியானத் தமர்ந்து, பாமரமக்கட்குப் பக்தியையும் புத்தியையும் தருவான் வேண்டி, மவுனநிலைகாட்டி யோக சாதனத்தில் வீற்றிருக்கும் தொண்டர் (துறவி) தம் பெருமையைச் சொல்லவும் பெரிதல்லவா?

........"கண்மூடி மவுனியாகித் தனியே யிருப்ப தற் கெண்ணினேன்"........என்ற நந்தாயுமானார் வார்த்தையை நமக்குப் பிரத்தியக்ஷமாகக் காட்டியருளிய நமது மவுனகுரு ஸ்வாமியின் மகிமையைப் பேசவல்லார் யார்?

எனது பிறப்பிடம் சென்னைதானெனினும் வாழ் நாள் கழிவது பிறதேச சஞ்சாரமேயாம். எனது தேச சஞ்சார யாத்திரையில் நான் தெரிசித்த துறவி கட் களவில்லை. மேல்வேஷப் போலித்துறவிகளிடம் நெருங்கிப் பழகியும் அவர்கள் மனக்கருத்தைத் தெரிந்தும் விலகினேன். உண்மைக் கழிவில்லாது யோக சமாதி எய்திய கும்பகோணம் ஸ்ரீ மவுனகுரு சாமியவர்களின் மடத்தை மிதித்தவுடனே ஒவ்வொருவருக்கும் ஓர்வித நல்லெண்ணம் உதயமாவதை

நாளும் தெரியலாம். பத்தரைமாற்றுப் பசும்பொன்னைப்போல் பிரகாசிக்கும் தேகத்தையுடைய நாகப்பட்டினம் ஸ்ரீ மவுனசாமியைச் மாயவரத்தில் தெரிசனம் செய்ய நேர்ந்த சமயம் உண்மைத் துறவிகளின் குறிப்பை அவாது திருமுகமே ஒவ்வொருவருக்கும் காட்டுகிறதை நேரில் பார்த்தேன்.

இதுபோல் இந்நூலுக் கதிபதியான மகானையும் நான் தெரிசிக்க நேர்ந்த சமயத்தில் அவரது உண்மைக் குறிப்பானது என்மனதைக் கவர்ந்து பாடலெழுதவும் வழிகாட்டி நின்றது. என்மனக் குறிப்பறிந்தோ அறியாமலோ எனதபிமான குலதிலகர், கனம் **ஐயாவு நாடார்**வர்களும் பாடலெழுதித் தரும்படி வற்புறுத்தினர். அதன்படி எனது சிற்றறிவிற் கெட்டியமட்டில் இச்சிறு புஸ்தகத்தை எழுத நேர்ந்தது. நல்லா ரொருவர்மீது பாடிய பாட்டுகளாதலின் அம்மகானுபாவர் மகிமையை வேண்டியேனும் இதிற் காணுஞ் சொற்பிழை பொருட்பிழைகளைப் பொறுப்பது ஆன்றோர் கடமையாம்.

சுவாமியவர்களின் பரிபூரண கடாக்ஷமும் எனதாசிரியர், ஸ்ரீமான் **உடுமலை சரபகவி** யவர்களின் ஆசீர்வாதமும், வழிபடுகடவுளாம் ஸ்ரீ முருகன் கிருபையும், சத்கதாமாலை புஸ்தகாபி மானிகள் அன்பும், எனது தமிழை மென்மேலும் விருத்தி செய்யுமாக. சுபம்.

| | |
|---|---|
| சத்கதா<br>சங்கீத நிலையம்,<br>23-1-25. | இங்ஙனம்:<br>**ச. சு. சங்கரலிங்க நாடார்,**<br>நாடகாசிரியர், சென்னை. |

உ

முருகன் துணை.

# ஸ்ரீ மௌனகுருசாமி
# மகத்துவமஞ்சரி.

---

## சிவசுந்தர விநாயகர் துதி.

### விருத்தம்.

சீராரு மவுனகுரு சாமிதன்
　　றமிழ்மாலை செப்பு தற்குப்
பேராரு மென்மன தமர்ந்துநற்
　　றுணை தந்து பேசுங் கல்வித்
தேராரு முலகெலாம் புகழ் சென்னை
　　சிவஞான புரியிற் சேர்ந்தத்
தாராருஞ் சிவசுந்த்ர கணநாதர்
　　மணமேவு சதங்கைத் தாளே.

---

## மஸ்தான் வணக்கம்.

### விருத்தம்.

பணங்குடி கொண்ட தாலே
பகைத்திடு மனமாம் பேயின்
கணங்குடி கொண்ட மாயக்
கசடரை நீக்கி ஞான
மணங்குடி கொண்டே யுற்ற
மவுன தேசிகனைப் பாட
குணங்குடி கொண்ட மஸ்தான்
குருபதங் காப்ப தாமே.

---

## துலுக்காணத்தம்மன் றுதி.

### விருத்தம்.

அந்தரி வாராகி நீலி
அபிராமி யகில மாதா
சுந்தரி துளூர்க்கா ணத்தித்
தூயபொற் பாதங் காக்கும்
தந்திர தவத்தின் மவுன
சாமி சங்கீத மாமிச்
செந்தமிழ் மாலை என்றும்
ஜெகத்தினி லுலவத் தானே.

## பதிகம்.

(ஆ. வி.)

கலிகால காக்ஷியிற் கண்கண்ட ரூபமாய்க்
காரணப் பிரம மயமாய்க்
கண்மூடி அன்னபா னதியை வெறுத்துக்
கலங்காத கருணை முகமாய்ச்
சலியாத யோகச் சமாதிநிலை காட்டிச்
ஜனானந்த ஞான மூட்டும்
சாதுவே சன்மார்க்க சந்யாசி யேஎனைத்
தற்காப்ப துன்பரங் காண்
மெலிவான வடியார்தம் வினையோட தவநீடு
விளையாடல் செய்யு முனியே
வேத வேதாந்த மெஞ்ஞானப் பிரகாசனே
விகசிதத் துறவி னமுதே
மலர்மேவு சென்னைமா நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே (1)

---

### பாட்டு.

(சாமியே கந்தசாமியே—என்றமெட்டு).

யோகியே மவ்ன யோகியே—பல
யோக சாதன மேவு மாஜன (யோ)

உயருந்தவ மிலகுஞ் சடைமுடி
யணியுங்குரு முனியுந் துதிபெறு
மயனும்பல சுரருங் கனிவொடு
பரவுஞ்சுக மருளுங் கனகுண (யோ)

உற்றுப்பிர சித்தித் தருமொரு
நிஷ்டைத்தவ முற்றுப் பரவெளி
பெற்றுப்பல மக்கட் கதிசய
பக்திப்புனை தத்வச் சுடர்நிலை (யோ)

ஊனுறக் கந்தனை விடுத்து
மானிடப் பந்தம தறுத்து
ஞானநற் சிந்தனை பிடித்து
மோனசற் குண்டம தமைத்த (யோ

உன்பதசந் தம்புகல் கவிபுனை
சங்காலிங் கன்றனை நினதொரு
பங்கினில்தங் குஞ்செயல் புரிபவ
ரந்தருமின் பங்கொளு மதுரித (யோ)

---

## பதிகம்.

(ஆ. வி.)

பேசாத வானந்த பேரின்ப நிட்டையிற்
பேர்பெற்ற தியான மலையே
பிரம்மச் சரீரப் பிறப்பான துறவறப்

பெருமைக் குகந்த கனியே
பாசா டவிக்குளே திரிகின்ற நாயேற்கு
பாதமலர் தந்து காப்பாய்
பரமனரி யயன்மரர் பரவுசுக வாரியே
பக்த ரக்ஷக மூர்த்தியே
வாசாவி லேபேசு மானிடப் புல்லர்க்கு
மகத்துவம் விளக்கு மதியே
மகாஜனப் பிரசங்க சன்மார்க்க சாதுவே
மாருத யோக வமுதே
மாசற்ற சென்னைமா நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (2)

---

## பாட்டு.

(அம்பிகா உன்மகன்—என்றமெட்டு).

தேசிகா மவ்ன மூர்த்தியே
வாசிகா தியான கீர்த்தியே (தே)

மாசிலா ஞான குரு
மானிடர்க்கு ளான வுரு
பூசிப்போர்க் கேற்ற தரு
புனித சுமன சுபமெனக்கருள் (தே)

மூவாசை தனை வெறுத்தாய்
மூடர்செயல் மனம் பொறுத்தாய்
தேவாதி தமை யடுத்தாய்
ஜெகத்தில் மிகுத்த புகழ்க்குடம் பெடுத்தாய்
(தே)

சன்மார்க்க சாது சங்கஞ்
சந்யாச யோகத் தங்கந்
தன்மார்க்கப் போர்து லங்குஞ்
சங்கர லிங்கன் சங்கீதத்தமிழ் முழங்கும் (தே)

---

## பதிகம்.

(ஆ. வி.)

தனியே யிருப்பதிற் சுகமேது டலேனது
சாதனைக ளேதென்னு மோர்
சண்டாள மானிடர்க் கண்காண யோகச்
சமாதி நிலையான முதலே
கனியேனு மரியசெங் காயேனு முதிர்சருகு
கந்த மூலங்க ளேனுங்
கன்மானு சாரப் பிசாசென் வயிறறுக்
கருந்தாத தவ போசனு
அநியாய பூமியிற் றிரிகின்ற வென்னைநின்
னடிமைப் பணிக் குரித்தா

யாக்கிமெஞ் ஞானபே ரின்பவமு் தூட்டுவா
யற்புதக் கிருபா கரா
மணிமேவு சென்னைமா நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே (3)

---

## பாட்டு.

(துலங்கு செம்பொன்—என்றமெட்டு).

குணங்குடி மஸ்தான்சமாதிக்
கோவிலுக்கோர் விளக்காய்
கொண்டாய் மவுனபீடமே
பேரின்பயோகங்
கொண்டாய் மவுனபீடமே (குண)

கோலமுற்ற ஜாலவித்தை
யாமெனச்சொல் மானிடர்க்கண்
கோவிலுக்கோர் விளக்காய்
கொண்டாய் மவுனபீடமே
பேரின்பயோகங்
கொண்டாய் மவுன பீடமே (குண)

குருபரமெனனதுதி
செயுமடியவர்மனக்
கோவிலுக்கோர் விளக்காய்
கொண்டாய் மவுனபீடமே
பேரின்பயோகங்
கொண்டாய் மவுனபீடமே (குண)

கும்பிடுஞ் ஜனங்கள் துய
ரங்களை விலக்குமருட்
கோவிலுக்கோர் விளக்காய்
கொண்டாய் மவுனபீடமே
பேரின்ப யோகங்
கொண்டாய் மவுனபீடமே. (குண)

குரித்த சுகத்தை
வெறுத்து ஜனித்த
கோவிலுக்கோர் விளக்காய்
கொண்டாய் மவுனபீடமே
பேரின்ப யோகங்
கொண்டாய் மவுனபீடமே. (குண)

வணங்குமடியார் ஜனங்கள்கோடி
வருவாருன்தவ சாலையைநாடி
அணங்குநோயனு காமற்றேடி
ஆதிக்கம்பெற்றாய் நிலைகூடி
அன்புவிளங்குந்தங்கமே—சங்காலிங்கன்
சந்தமுழங்குஞ்சங்கமே. (குண)

## பதிகம்.

(ஆ. வி.)

கட்டுக் கடங்காத காமப் பிசாசின்
கழுத்தைப் பிடித் திறுக்கிக்
கனலென்ற ஞானக் கயிற்றினாற் கட்டிக்
கர்ம பாசத்தை நீக்கி
நிட்டைச் சிவத்தியான வாழ்விற் சுகச்செல்வ
நீடித்த மோன சுகுணா
நிகரற்ற பாதமலர் சேருதற் கெண்ணினேன்
நின்மன திறங்கி யாளாய்
பட்டப் பகற்பொழுதை யிருளென்று மதியற்ற
பாவிகட் கோர் விளக்காய்
பகலிரவு கண்மூடி யோகசா தனமுற்ற
பரி பூரணச் சோதியே
மட்டற்ற சென்னைமா நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (4)

---

(பாட்டு.)

(வனஜாக்ஷி—என்றமெட்டு.)

குருசாமி
குவலயம் புகழ் மௌன (குரு)
கொடியதேக முறுவைபோக
மதினையேக தவஞ்செய்யோக (குரு)

சென்னை-600 005

கூடிமெத்த வேதுநிக்கு
மானிடர்க்கு ளேயுதிக்குங்

தருமதுறவறத்தை சார்ந்த சந்யாசி
சாதுமகாஜன தானப்ரகாசி
பிரம்மசரீப்பிர தானவிலாசி
பெருமைமேவு மகிமைதாவு
முனிவரோது மரியஞான (குரு)

மரணஜனனபிணி மாய்கையைத்தீராய்
மதிதருமுனதொரு மலரடிதாராய்
சரணம் சரணமிது தருணமேபாராய்
சங்கரலிங்கந் தந்திடுந்தமிழ்
இந்திசைபுகழ் மங்களகுண (குரு)

---

## பதிகம்.

(ஆ. வி.)

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே
யாதினும் அரிதென்னு மோர்
இப்பிறவி யிற்பெற்ற போகசுக மோகமா
மிச்சை எல்லாம் தவிர்த்து
உண்ணுத லுறங்குதல் உலகத் துலாவுதல்
உற்றதாய் தம ராதியர்

சூக்கமதை நீக்கிநன் மார்க்கச் சமாதிநிலை
யோங்கு மெஞ்ஞான முனியே
வண்ணமட மாதர்தரு மையலதை யோட்டிநின்
மலரடித் தொண்டனுக்கு
மார்க்கமதெனக்கருளி காப்பதுன் பாரமே
மாசற்ற சித் விலாசா
மண்ணுலகு புகழ்சென்னை நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (5)

---

(பாட்டு)

(மாலையிலே தென்றல் சோலையிலே—என்றமெட்டு)

தேகத்திலே ஞான பாகத்திலே மோன
யோகத்திலே பூரணம்—வாசிமுனையின்
வேகத்திலே காரணம்
தேசம் புகழும்விசு வாசந் தத்துவநியான
நேசந் தருங்கீர்த்தியே—மவுனநிழல்
வீசுங் குருமூர்த்தியே (தேக)

(தோகையரா.)

வேதாந்த சாகர விளக்கான பேரின்ப
மேவு மஸ்தான் தியானமே
நாதாந்த முச்சுடரில் நடனமிடு மவுனகுரு
நாதனின் பூம் பாதமே

(பாட்டு)

நாடுந் தமிழ்மாலை சூடுஞ் சுகவாழ்வு
கூடு மிதே சத்தியம்—மவுன நிலை
தேடு மதே நித்தியம்.
நானா ஜனங்கள் பணி தியானா பரணமணி
மோனா னந்தராஜனே—பரவெளியிற்
ருனே தங்கும்வாசனே (தேக)

(தோகையரா.)

பேர்டெற்ற வாலிபப் பிராயத்திலே ஞான
பிரசித்த மவுன குருவே
தார்பெற்ற சங்கர லிங்கேஸ்வரத் தியான
சமாஜப் பிரகாச வுருவே.

(பாட்டு.)

தாதா சித்தர்பரவும் போதா சமரசவி
னோதா சதானந்தனே—சகலகலைக்
யாதா சுகாதீதனே
தஞ்சம் உன்னிருபாத கஞ்சந் தினந்
[தொழுதேன்
கொஞ்சங் கிர்பை தாருமே—மாயப்பிரபஞ்ச
வஞ்சமதைத்தீருமே (தேக)

---

## பதிகம்

(ஆ. வி.)

உண்டுண் டுறங்குவதை கொண்ட மானிடர்தமக்
கொப்பற்ற கீர்த்தி காட்டி
யோகத் திருக்குமுன் தேகத்தை தெரிசிக்க
வோடுமே சகல பிணியுங்
கண்டதே காக்ஷியாய்க் கொண்டதே கோலமாய்
கர்ம பாசத்துள் மூழ்குங்
கடையேனு முன்னடிக் கடிமைபெற வேண்டினேன்
கருணை தந்தாள நினையாய்
சண்டப்பிர சண்டவுத் தண்டபகி ரண்டச்
சதானந்த நீல கண்டச்
சாயுச்ய பதவிக்கு மேலான நிஷ்டையிற்
சந்தத மமர்ந்த துரையே
மண்டலந் துதிசென்னை நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (6)

---

## பாட்டு.

(நம்பினேனுன்னையே—என்றமெட்டு).

மவுன மூர்த்தியே
ச—மான மோன தியான ஞான (மவு)

சவுனகாதி புகழும்ரூப
தரணிபோற்றுஞ் ஜனப்ரதாப
புவனபோக மிலகுயோக
போத கீத வேத நாத. (மவு)

மரணஜெனன வுலகவாழ்க்கை
மனிதவடிவ மானயாக்கை
*கரணமாகு முனதுசேர்க்கை
கால கோல ஞால சீல. (மவு)

பற்றையறுத்தப் பரமயோகி
பாடுஞ்சங்கர லிங்கத்தியாகி
தத்துவச்சுகந் தரும்விவேகி
தான மோன தியான ஞான. (மவு)

---

* கரணம்—திரிகரணம்.

## பதிகம்.

(ஆ. வி.)

காவிவஸ் திரங்கட்டி தேகத்தில் வெண்ணீறு
　　கையில் ருத்ராக்ஷ மாலே
காலேயிற் பலகாரம் பகலிலறு சுவையன்னங்
　　கதிரோ னடங்கு வேளே
மூவகைச் சாராய பானம்பின் பதியற்ற
　　முண்டைகள் தம்மோ டுறக்கம்
மோகசங் யாசிகட் கூட்டுறவை நீக்கிநன்
　　மோன நிலேவீடு கட்டி
பாவிகள் மயக்கமே தாவிகள் தயங்கசார்
　　பான தவமே யியற்றும்
பக்திப் பிரசன்ன சம்பன்ன சுகஞானியே
　　பால னெனேயாள நினேயாய்
மாவிஜய சென்னேமா நகர்மேவு ராயபுர
　　மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
　　மௌனகுரு மூர்த்தி மணியே. (7)

### பாட்டு.

(ராஜவிசுவாஸலாலா—என்றமெட்டு).

குணங்குடிக்கோவில் கொண்ட
குருசாமியே—மவுன
குருசாமியே (குண)

பணங்குடிக் கொண்டோரன்பு
பாசத்தை நீக்கித்தென்பு
பாலிக்கும் நிஷ்டைகொண்ட
குருசாமியே—மவுன
குருசாமியே (குண)

(தோகையரா)

தத்வப் பிரகாசச் சமாதிநிலை பீடமே
சதானந்தந் தரு ஞானமே
சித்திக்கு வித்தான சின்மய சொரூபமே
தேக சிங்கார மயமே.

### பாட்டு.

யோகதெய் விகபதி
யோதுங் கருணைநிதி
மோகக்கடல்கடந்த
குருசாமியே—மவுன
குருசாமியே (குண

(தோகையரா)

பேசாத வானந்த நிட்டையிற் கூடியப்
பிரபல சன்மார்க்க சாது
பாசா டவிக்குளே வீழாம லெந்தனைப்
பாது காத்தரு ளிப்போது.

பாட்டு.

பிரம்மச் சரீரமணி பெற்றதெய் வீகமணி
தர்ம சங்காலிங்கன்
குருசாமியே—மவுன
குருசாமியே (குண)

---

பதிகம்.

(ஆ. வி.)

கண்மூடிம வுனியாய் சும்மா யிருப்பதிற்
கதிமோக்ஷ மில்லை என்னுங்
கலிகால ஜனமெலாம் புகழ்பேசு மானந்தக்
கடலான யோக வலையில்

விண்மூடு நிஷ்டையாந் தோணியை செலுத்தி
[யோர்
விக்கின மிலாத ஞான
விரதவுப வாசமிகு விளையாடல் செய்யுநின்
மேன்மைநான் சொல்ல வெளிதோ
உண்ணு னுறக்க மில்லாத ஜடலேஸ்வரா
வோதரிய ஜன விலாசா
வுபயபா தத்தடிமை யுற்றிடக் கோரினேன்
வுண்மை எனையாளு மையா
மண்ணுலகு புகழ்சென்னை நகர்மேவு ராயபுர
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (8)

---

## பாட்டு.

(பாண்டியனீன்றமீனு க்ஷி—என்றமெட்டு)

சாதுவே மவுன குருசாமி
சன்மார்க்க சங்கமார் பூமி
வேதவே தாந்தம் புகழ்நாமி
துறவறம் விளங்குமோர் நேமி (சா)

(தோகையரா)

சதானந்த யோகச் சமாதிநிலை தன்னிலே
சார்ந்த மெஞ்ஞான மூர்த்தி
சிதாகாஸ சின்மய சொரூபப் பரம்பொருள்
தெரிசன மறிந்த கீர்த்தி.

பாட்டு.

மாகுணங் குடிவளர்த் தங்கம்
மகத்துவ மகிமைக்கொரு சிங்கம்
ஆகுமஸ் தான்தமிழ்ச் சங்கம்
பக்தருக் கானபெயர் தங்குஞ் (சா)

(தோகையரா.)

கல்லாத மூடர்க்கு சொல்லாத மவுனநிலை
காட்டும் பிரசன்ன குருவே
பொல்லாத பாவிஎன் மாயவிருள் நீக்கிநற்
புத்தி தந்தாளு முருவே.

பாட்டு.

சற்ஜன தியான சிங்காரா
சங்கர லிங்க னுபகாரா
விற்பனர் போற்று மதிவீரா
மவுன விரத மலர்த்தாரா (சா)

170068
சென்னை-600 ...
Q2:41

## பதிகம்.

(ஆ. வி.)

ஆலயங் காயமா மன்புகிவ லிங்கமா
மாகுமென் ருப்தர் சொன்ன
அறிவிற் சிறந்தமொழி தனையிப் புவிக்குரிய
வனைவர்க்குந் தெரியும் வண்ணம்
சிலமுறு தவயோக சாதன விளக்கமாய்
ஜெனன பிணி தீண்டாமலே
சிற்சுகம தானபே ரின்பவா ரிதிநின்று
சேவை தந்தாண்ட வடிவே
பால்பழம் பருகாத மனித தீபார்த்தியே
பாடுமெனை யாள நினையாய்
பரமபத நாதனற் கருணைபெறு மானந்த
பக்தனே சித்தர் வடிவே
மாலயன் புகழ்சென்னை நகர்ராய புரமேவு
மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
மௌனகுரு மூர்த்தி மணியே. (9)

---

## பாட்டு

(சீரோங்குதென்கழனி என்றமெட்டு.)

சீரோங்கு சென்னைநகர் சிங்கார ராயபுரம்
பேரோங்கு மவுனயோகியே—பிரபல மெஞ்ஞானப்
பேரோங்கு மவுனயோகியே (சீ

கொண்டாடுங் குணங்குடியார் நின்றாடுங் கோவிலெ
[திர்
கொண்டாய் சமாதி நிஷ்டையே—பேசாதமவ்னங்
கொண்டாய் சமாதி நிஷ்டையே (சீ)

மோகாந்த காரம்விட்டு யோகாந்த மோனந்தொட்டு
யேகாந்தமான தேசிகா—சன்மார்க்க சங்க
யேகாந்தமான தேசிகா (சீ)

கலிகால மானிடர்க்குக் காமாதி காருக்கு
சலியாத யோகசாதனா—சமாதிநிலை
சலியாத யோகசாதனா (சீ)

மெய்யான சற்குருவே வேதாந்த தவவடிவே
ஐயாவந் தென்னையாளுவாய்—நம்பினேனுன்னை
ஐயாவந் தென்னையாளுவாய் (சீ)

சங்கீத தமிழ்ச்சுராங்கம் சாமிநின் சாதுசங்கம்
சன்மார்க்க சங்கரலிங்கம்—தரும்பிரசங்கம்
சன்மார்க்க சங்கரலிங்கம் (சீ)

---

## பதிகம்.

(ஆ. வி.)

ஐவகை எனும்பூத மாதியை யடக்கியே
அங்குற்ற மூல வனலை
அறிவென்ற சுழிமுனை நிறுத்தி யாராதார
மாகிய யனாதி வடிவைச்

செய்வகைத் தோரணைப் பிசகாது மோனத்தில்
    ஜெயபீட மிட்ட முதலே
சித்தாதி சித்தனே தெரிசிக்கு மடியார்கள்
    சிந்தைதுயர் தீர்க்கு மரசே
மெய்வகைத் தோற்றத்தில் விளையாடு மோனியே
    வேண்டு மெனையாள நினையாய்
விறிட்ட ஞானப்ர வாகத்தில் நாசிமுனை
    மீதுற்ற விமல வடிவே
மைவண்ணர் புகழ்சென்னை நகர்மேவு ராயபுர
    மாகுணங் குடி வள்ளலார்
மஸ்தான் சமாதியெதிர் விஸ்தார மாகிவளர்
    மௌனகுரு மூர்த்தி மணியே. (10)

---

## பாட்டு

(ஆண்டிபண்டாரம்—என்றமெட்டு)

மவுனயோகியே—தேசு
மணிதியாகியே—ஞான (மவு)
புவனச ராசரங்கள் போற்றுஞ் சமாதிநிலை
தவமதற் கேசிறந்த சந்யாசத் தேகமலை (மவு)
கண்மூடி யோகஞ்செய்யுங் காரணமெஞ் ஞானகுரு
பண்பாடு மெனக்குனருட் பாக்யெந்தந் தாளுமையா
சீராரு[illegible]குணங்குடியார் பேரான் சமாதியெதிர்
நேராக யோகமுற்ற நின்மல ப்ரதானகுரு (மவு)
ஊனுறக்க மேதவிர்த்தா யுற்றகலை ஞானமுற்றாய்
மானிடர்க்கு ளேசிறந்தாய் மஸ்தான் சினேகம்பெற்
[றாய் (ம)

பேசாத நிஷ்டையிலே பேரின்ப சாகரத்தில்
ஆசாபாசந்தவிர்த்து அமர்ந்தாய் சுகாதீதத்தில் (ம)
ஆரா தனைப்புரியு மன்பரிட ரேதவிர்க்கும்
போரார்சங் காலிங்கம் பேசுந்தமிழ்ப் பாமணக்கும் (ம)

---

## இதுவுமது.

(ஜில்லாத்துஜரிய—என்றமெட்டு).

மனோனந்த மௌனகுரு சாமிபாதம்
மாசற்று பேர்பெற்ற தேவப்ரசாதம்
ஜனோந்தகீதந் தனக்கே பிரமாதம்
சன்மார்க்கபோதந் தணிந்த விநோதம் (மனோ)
பிரம்மச் சரீரம் பிரந்த விலாசம்
பேணிப் பணிந்தோர்க்குக் காணும் பிரகாசம்
தர்ம சொரூபந் தழைத்த சமாஜம்
சாதுக்கள் நேசந் தரும்ஞான வாசம் (மனோ)
பேசாத வானந்த பேரின்ப மாரி
போரார்ந்த யோகப் பிரஜோப காரி
தாசானு தாசர் தமக்கே முராரி
சங்கர லிங்கன் றமிழ்ச்சந்த வாரி (மனோ)

---

## வாழ்த்து விருத்தம்.

திருவருள் வாழ்க வேதச்
செந்தமிழ் வாழ்க மன்ன
குருபரன் வாழ்க பக்த

கோடிகள் வாழ்க செங்கோல்
பரவிய வரசர் வாழ்கப்
பார்புகழ் முனிவர் வாழ்க
பெருகுமிந் நூலை யச்சிற்
பிறப்பித்தோன் வாழ்க மாதோ.

[மவுனகுருசாமி மகத்துவமஞ்சரி முற்றிற்று].

---

## துறவறப்பெருமை.

### (ஆனந்தக்களிப்பு).

ஆனந்தமான சமாதி—நிஷ்டை
யார்க்குக் கிடைக்கும் ஜனனந்தஜோதி (ஆ)

தானந் தவாத பீடம்—மவ்ன
சாமிக்கு நேமித்த தாமிந்த வோடம்
ஞானந்தரும் யோகக் கிரீடம்—பெற்ற
நாதாந்த மாமதுவே தத்வ பாடம் (ஆ)

பேசாத பேரின்ப நிஷ்டை—நல்ல
பிரம்மச்சரீரப் பிறப்பென்ற கட்டை
கூசாமல் போற்றுங் குரட்டை—கொண்ட
கோலப் பிசாசுக் கிதேஞான முட்டை (ஆ)

குணங் குடியார்தந்த போதம்—கற்றுக்
கொண்ட மவ்னகுரு சாமிதன் பாதம்
வணங்குவோம் ஞானப்பிர சாதம்—வந்து
வாய்க்கும் நமக்கிது லோக்யமே நீதம் (ஆ)

வந்த பிறப்பிது மாயம்—அந்த
மார்க்கந் தெரியாத னித்திய காயம்
சொந்த மெனுஞ்சொல்ல பாயம்—அதன்
சூக்ஷி யறிவதுவே நல்லுபாயம் (ஆ)

கால விநோத மென்போரே—நம
கண்கண்ட காக்ஷியிற் காண்பவர் யாரே
மேலவரைத் தொழு வோரே—இன்ப
மெய்துவர் பொய்யல்ல மெய்யிது பாரே (ஆ)

அன்ன பானமென்ப தில்லை—நமக்
கானந்த மேதரும் நித்திரை யில்லை
பொன்பொரு ளாசையு மில்லை—இந்தப்
புண்ணிய ருக்கிணை யாருண்டு சொல்ல (ஆ)

சாது சன்மார்க்கப் பிரசங்கந்—தன்னை
சங்கீத மாய்ச்சொல்லுஞ் சங்கரலிங்கம்
ஓதிய ஞான மிலங்கும்—மன்ன
யோகிஸ் வரர்தவ யோகந் துலங்கும் (ஆ)

---

## மனதறிவுறுத்தல்.

(நாதனுமக்கிரியை—ஆதி தாளம்).

**கண்ணிகள்.**

அலையாதே—வுல
காசையினால் மலையாதே
நிலையா வாழ்விதை நிஜமென நாடி
நிதமே மனமே மாய்கையில் வாடி (அலை)

மோகம்—தன்னில்
முழுக்கெடுமே யிந்ததேகம்
சாகரமேசமு சாரத்தினைசை
சந்தைக் கூட்டமல்லவோ ஜனவோசை (அலை)

பிள்ளை—பெற்ற
பின்தெரியுமே அதன் சள்ளை
கொள்ளையிட்டாகிலும் கொடுவெனக் கேட்கும்
கொடிய நமனைப்போல வுயிரதைபோக்கும் (அலை)

ஜென்மம்—இந்த
தேசத்தெடுப்பதுவே கன்மம்
துன்பம்தாகிய *தொரவினைக் கிட்டி
சொல்லுஞ் சங்கரலிங்கன் வார்த்தையைதட்டி (அலை)

---

* தொரவு=கிணறு.

---

## இப்புஸ்தகம் விற்குமிடம்.

ஓ. மா. ஐயாவு நாடார்,
பட்டன் பாக்டரி,
நெ. 72, மணியக்கார சவுள்டிரி ரோட்,
வண்ணாரப்பேட்டை,
சென்னை.

## ஆர்டருக்கு முந்துங்கள்.

படிக்கப் படிக்கப் பக்தியைத் தரக்கூடியது. தற்கால நாகரீக முறை தழுவிய புதிய ராகதாள பார்சி வர்ன மெட்டுக ளமைந்தது. பண்டிதர்முதல் பாமரரும் எளிதி லுணரும் வண்ணம் எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றது.

### ஸ்ரீ சிவசுப்பிரர்மணியர்

### செந்தமிழ்க் கீர்த்தனை

சுமார் 200 பாடல் 120 பக்கங் கொண்ட புஸ்தகம். இந்நூலாசிரியரால் எழுதியது. ஆசிரியர் யோக சாதன ஆப்டோன் படத்துடன் கூடிய புஸ்தகம் 1-க்கு விலை அணா 12. தபால் செலவு பிரத்தியேகம். கீழ்க் காணும் விலாசத்திற் கெழுதலாம்.

விலாசம்:—

நா. வடிவேல் நாடார்,

சைகிள் ஷாப்,

சாத்தூர்.


170068

# நாகரீககாலத்தில்

## நமக்கேற்றவஸ்து.

உண்மையும் உத்திரவாதமும் கொண்டு உலகப் பிரசித்தி பெற்ற மெஸர்ஸ். தி. மா. ஐயாவு நாடார் & கம்பெனியில் தயார் செய்யும் தந்த பட்டன்களே நமது சிந்தைக் கிசைந்தது. பலவித தினுசுகளில், கோட், ஷாட், குடுதுணி முதலிய அங்கிகளுக்கேற்ற பட்டன்கள். எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும். மொத்தமாகவும் சில்லரையிலும் விற்கப்படும். உங்கள் ஆர்டரை எதிர்பார்க்கின்றோம். ஒருமுறை வாங்கி உபயோகித்து பாருங்கள்.

விலாசம்,

தி. மா. ஐயாவு நாடார் & கம்பெனி,

பட்டன் பாக்டரி,

வண்ணாரப்பேட்டை, சென்னை.